**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320235834

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2022

Accepted: 20.12.2022

Published: 01.01.2023

Citation:
Shunmugaraja, J. "British Colonialism and Tamil Society: Obliterations and Exodus." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 3, 2023, pp. 67–80.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.5834

*Corresponding Author:
jsrajamku@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# British Colonialism and Tamil Society: Obliterations and Exodus

**J. Shunmugaraja**
*Assistant Professor in Modern History, School of Historical Studies*
*Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0003-0383-9568*

**Abstract**
The British were the forerunners of publicizing indentured labour system in the globe. In the beginning the structure was tentatively observed in their American Colony Jamestown. Initially, the whites had also comprised with the indentured labourers category. After the black population arrived in 1619, who had subdued by the indentured labour system were mercilessly hounded by their white masters. Slavery, thus, replaced indentured system in the New World. In Mauritius, such an exigency had arisen when slavery was abolished in 1834. The exploitative experiences of their past urged them to take to the system of indentured labour to ensure prompt supply of labour for their plantation work. The slaves emancipated in the wake of slavery abolition in 1834 were in no mood to opt for plantation work. Therefore the white planters in Mauritius had to look to India for their alternative source of labour supply. While commencing the study period have restricted from 1834 to 1922. 1834 was the year in which slavery was abolished in Mauritius. 1922 was the year in which a comprehensive Act streamlining the old process of immigration was adopted by the Indian legislature. The paper has been classified into four parts. The first, second and third parts of the paper are very comprehensively discussing about the negative effects of the British colonialism, degradation of the economic state and the ground reality of the 19th century Tamil society. The concluding part of the paper has made an attempt to give an outline about the 19th century colonial Tamil Diaspora of the world.

**Key Words:** British Colonialism, English East India Company, Indentured Labour, Torture Commission Report, Tamils Emigration, Destruction of Indian Economy, Famines of India, Abolition of Slavery, Mauritius, Sri Lanka, Assam, Fiji, Migration from Madras Presidency

**References**

1. John Kennady, R. 1875-85. *Emigration from Madras Presidency to British Burma* (Unpublished M. Phil Diss., Bharathiya University, 1991), p. 4.
2. Subramanian, P. *Social History of Tamils* (New Delhi: D.K. Print World, 1996), p. 194.
3. David Ludden, *Peasant History in South India* (Princeton: Princeton University Press, 1985), pp. 130-131.
4. Gyan Prakash, Bonded Histories: Genealogies of Lab or Servitude in Colonial India (Cambridge: Cambridge University Press, 1990), pp. 82-83.
5. Arun Mukherjee. 1993. *Scarcity and Crime: A Study of 19th Century Bengal*, Economic and Political Weekly, vol. 28, pp. 237-242.
6. Subramanian, P. *Social History of Tamils*, p. 192.
7. Abhijit Banerjee & Lakshmi Iyer 2005. *History, Institutions, and Economic Performance: The Legacy of Colonial Land Tenure Systems in India*. The American Economic Review, vol. 95, pp. 1192-1193.

8. Subramanyam Reddy, D. 1988. *The Ryotwari Land Revenue Settlements and Peasant Resistance in the Northern Division of Arcot of the Madras Presidency during Early British Rule*, Social Scientist, vol. 16, pp. 37-38, See also P. Subramanian, Social History of Tamils, p. 203.
9. Report on the Commission for the Investigation of Alleged Cases of Torture in the Madras Presidency, 1855, p. 18.
10. Ibid., p. 24.
11. Joseph Baranabas, C. *From Madras to Mauritius 1800-1856: Studies in Emigration and Assimilation*, (Unpublished Ph.D. Diss., University of Madras, 1991), p. 24.
12. 1915. Report on Native News Papers. vol. II, p. 1465.
13. Thirthankar Roy, *Acceptance of Innovations in Early Twentieth-Century Indian Weaving*, The Economic History Review, vol. 55, August 2002, p. 507.
14. Bipan Chandra, Amles Tripathi and Barun De, Freedom Struggle (New Delhi: National Book Trust, 2004), pp. 3-5.
15. Subramanian, P. *Social History of Tamils*, p. 223.
16. Adapa Sathyanarayana. 2002. *'Birds of Passage': Migration of South Indian Labour Communities to South-East Asia; 19-20th Centuries, A.D.,* Clara Working Paper, No. 11, 2001, p. 9; and see also Adapa Sathyanarayana, "Birds of Passage," Asian Studies, p. 109
17. Sugata Bose. 1919-1947. *Agrarian Engal: Economy*. Social Structure and Politics, (Cambridge: Cambridge University Press, 1986), p. 5.
18. Ramannujam, G. 1986. *Indian Labour Movement*, New Delhi: Sterling Publishers, pp. 90-91.
19. Reports of the Indian Famine Commission, 1880, Part I, p. 9.
20. Saradaraju. 1941. *Economic Conditions of Madras Presidency 1800-50*, Madras: University of Madras, p. 291.
21. Famine Commission Report. 1880. Part I, p. 10; See also Kathleen Gough, *Agrarian Relations in Southeast India, 1750-1976*, Review (Fernand Braudel Center), vol. 2, Summer 1978, pp. 29-30.
22. Famine Commission Report. 1880. Part I, p. 10; see also G. N. Rao, *Transition from Subsistence to Commercialised Agriculture: A Study of Krishna District of Andhra, C 1850-1900*, Economic and Political Weekly, vol. 20, Jun 1985, pp.60-63.
23. Saradaraju, Economic Conditions of Madras Presidency, p. 39; see also Leela Sami, *Gender ifferentials in Famine Mortality: Madras (1876-78 and Punjab (1896-97)*, Economic and Political Weekly, vol. 37, June 2002, p. 2594.
24. Report on the Speeches of Legislative Council of the Governor-General at Calcutta: The Indian Famine of 1877: Being a Statement of the Measures Proposed by the Government of India For the Prevention and Relief of Famines in the Future (London: C. Kegan Paul and Co., 1878) pp. 73-74.
25. Ibid., p. 202 and see also David Arnold, *Looting, Grain Riots and Government Policy in South India 1918*, Past and Present Society, vol. 84, August 1979, p. 114.
26. Karnataka Prakasika, Report on Native News Papers, February 21, 1898, vol. II, p. 13.
27. Kistna Patrika, Report on Native News Papers, February 21, 1898, vol. II, p. 13.
28. Bhatia, BM. *Famine and Agricultural Labour in India: A Historical Perspective*, Indian Journal of Industrial Relations, vol. 10, April 1975, p.577.
29. Nambi Aroon, K 1985. *Indians in South-Africa: With Special Reference to the Tamils* (Thanjavur: Tamil University), p. 22-23.
30. Dharma Kumar, 1965. *Land and Caste in South India: Agricultural Labour in the Madras Presidency During the Nineteenth Century, London: Cambridge University*, pp. 128-129.
31. Report on the Speeches of Legislative Council of the Governor-General at Calcutta: The Indian Famine of 1877, pp. 73-74.
32. Dharma Kumar. 1826-1867. *Land and Caste in South India*, p. 199; see also C. M. Turnbull, *Internal Security in the Straits Settlements*, Journal of Southeast Asian Studies, vol. 1, March 1970, pp. 37-38.
33. Christophe Z Guilmoto, *The Tamil Migration Cycle, 1830-1950*, Economic and Political Weekly, vol. 28, January 1993, p. 111; and Dharma Kumar, Land and Caste in South India, p. 199; see also Kathleen Gough, "Modes of Production in Southern India," Economic and Political Weekly, vol. 15,February 1980, p. 343.
34. Report on Outlines of A Plan: Submitted to Her Majesty's Government for The Purpose of Establishing An Authorized Committee To Regulate And Carry on the Introduction of Indian Laborers At Mauritius: The Colony From The Distressing Embarrassment which It Now Suffers, From The Want of Means To Cultivate The Land (London: Nichols, 1840), p.13.
35. Richard B Allen, *Licentious and Unbridled Proceedings: The Illegal Slave Trade to Mauritius and the Seychelles during the Early Nineteenth Century*, The Journal of African History, Vol. 42, ____ 2001, p. 99; and Report on The Export of Coolies from India to Mauritius (London: British and Foreign Anti-Slavery Society, 1842), p. 4; see also William A. Green, "Emancipation to Indenture: A Question of Imperial Morality," The Journal of British Studies, vol. 22, Spring 1983, pp.90-91.

36. Lanka Sundaram. 1931. *The International Aspects of Indian Emigration*, Asiatic Review, p. 745.
37. Dharma Kumar, Land and Caste in South India, p. 131.
38. Valentine Daniel, E. 1993, *Violent Measures in the Discursive Practices of Sri Lanka's Estate Tamils*. Comparative Studies in Society and History, Vol. 35, July 1993, p. 570; and Dharma Kumar, Land and Caste in South India, p. 129.
39. Maclean, CD. 1885. Manual of the Madras Presidency, Madras: The Government Press), pp. 502-503.

# பிரிட்டிஷ் காலனியமும் தமிழ்ச் சமூகமும்: சிதைவுகளும் மற்றும் புலப்பெயர்வும்

*ஜெ. சண்முகராஜா*
தலைவர், நவீன வரலாற்றுத் துறை, வரலாற்றுப் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***அறிமுகம்***

*பிரிட்டிஷ் கிழக்கு-இந்திய கம்பெனியினர் வருகைக்கு முன்பு இந்திய மாகாணங்கலிருந்த கிராமங்கள் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை தன்னகத்தே கொண்டிருந்தன. கிராமத்தினரின் தேவைகள் அனைத்தும் அவர்கள் விளைவித்த பொருட்கள் மூலமாகவும், செய்து வந்த தொழில்கள் மூலமாகவும் நிறைவேற்றிக்கொள்ளபட்டன. மிக அரிய தருணங்களில் மட்டுமே தங்கள் தேவைகளுக்கான தொழிலாளர்களை வேற்று கிராமங்களிலிருந்து தருவித்துக் கொண்டனர். கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்ய தேவைப்பட்ட தச்சுப்பட்டறைகள், பொற்கொல்லர்கள், நூல் நூற்பவர்கள், சாயத் தொழிற் சாலைகள், நெசவாளர்கள், பழ வியாபாரிகள், கருப்பட்டி தொழிற்சாலைகள், விவசாயிகள், எண்ணெய் உற்பத்தி செய்பவர்கள், மண்பாண்டம் செய்பவர்கள், எளிய விவசாய கருவிகள் செய்பவர்கள் என அனைத்து அத்தியாவசிய பொருள்கள் செய்பவர்களும் இருந்தனர். 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலங்களில் தென்னிந்தியாவிலிருந்த தொழிற்சாலைகள் தன்னிறைவு பெற்ற கிராமப் பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. தன்னிறைவு பெற்றிருந்த கிராமப் பொருளாதாரத்தின் நிலை பிரிட்டிஷ் காலனியம் இந்தியா வந்தவுடன் முற்றிலும் மாறிப் போனது. 19 மற்றும் 20-தாம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகள் வரை நிகழ்ந்த காலனிய ஆட்சி இந்திய பொருளாதரத்தை எவ்வாறு அழிவுக்குள்ளாகியது என்பது குறித்து இக்கட்டுரை கருப்பொருளாக கொண்டுள்ளது. கட்டுரையை எளிமையாக்க நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி காலனியத்தின் தாக்கத்தால் எவ்வாறு இந்திய கிராமப்புறங்களின் விவசாயங்கள் அழிவை சந்தித்தது எனவும், இரண்டாவது பகுதி குறுந்தொழில்களின் அழிவு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை விளக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மற்றும் நான்காம் பகுதிகளில் தொடர்சியாக இந்தியாவை சீர்குலைத்த பஞ்சங்கள் குறித்தும் காலனியத்தின் தாக்கத்தின் பின் விளைவுகள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.*

***முக்கியச்சொற்கள்:*** *பிரிட்டிஷ் காலனித்துவம், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, ஒப்பந்தத் தொழிலாளர், சித்திரவதைக் கமிஷன் அறிக்கை, தமிழர்கள் குடியேற்றம், இந்தியப் பொருளாதார அழிவு, இந்தியாவின் பஞ்சங்கள், அடிமைத்தனம் ஒழிப்பு, மொரிஷியஸ், இலங்கை, அஸ்ஸாம், பிஜி, மதராஸ் பிரசிடென்சியிலிருந்து இடம்பெயர்தல்*

## இந்திய கிராமங்கள் மற்றும் விவசாயத்தின் அழிவு

காலனிய ஆட்சியாளர்கள் இந்திய விவசாயிகள் மீது விதித்திருந்த கடுமையான வரிகளை எதிர்த்து இந்திய காங்கிரஸ் பேச தொடங்கியிருந்த காலம் காலனியத்தின் உச்சம் தொட்டிருந்தது எனக் கூறலாம். ஏனெனில் கடுமையான வரிவிதிப்பும் அதனை வசூலித்த முறையும் மிகக்கொடூரமாக இருந்தது. அரசு நிர்னயம் செய்த வரியை செலுத்திய பின் விவசாயிகள் விளைவித்த பொருள்களிலிருந்து சிறிய அளவிலான இலாபம் மட்டுமே அவர்களின் வாழ்விற்கு ஆதாரமாகக் கிடைத்தது. தொடர் வறட்சி மற்றும் செலுத்த முடியாத அளவிலான நிலவரி இந்தியர்களின் விவசாயத்தை வளர

விடாமலே செய்தது. ஆங்கிலேயர்களின் சுய இலாபத்திற்கான காலனிய அரசியலும் இயற்கை சீற்றத்தினால் ஏற்பட்ட பெரும் அழிவுகளும் இந்தியாவின் வறுமைக்கு அடிப்படையானது. இந்திய காலனிய அரசு பணிகளிலிருந்த ஆங்கிலேயர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் உலகின் வேறு எந்த பகுதிகளிலும் யாருக்கும் வழங்கப்பட முடியாத அளவுக்கு அதிகமாக இருந்தது.

காலனிய காலத்தில் விவசாயிகளின் வாழ்க்கை, வாய்க்கும் வயிற்றுக்கும் போராடுவதற்கே சரியாய் போனது. ஏழ்மையின் வெளிப்பாடாக இவர்களின் வசிப்பிடம் மண்சுவர் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட கூறை வீடாக இருந்தது. வீட்டில் உபயோகப்படுத்த பாத்திரங்கள் ஏதுமற்ற நிலையிலிருந்தனர். வெளிப்படையாகச் சொல்வதென்றால் அவர்களின் வாழ்க்கையில் துயரமும், வறுமையும் மட்டுமே நிறைந்திருந்தது. நெசவாளர்களின் நிலையோ மிகப் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. மதராஸில் மட்டும் 5,000 நெசவுத் தொழிலாளர்கள் ஒரு வேளை உணவிற்கே வழியற்றவர்களாக இருந்தனர். அக்காலங்களில் தொழிலாளர்கள் செய்கின்ற வேலைக்கு ஊதியமாகத் தானியங்களோ அல்லது வேறு பொருள்களோ வழங்கப்பட்டது. மிக அரிய தருணங்களிலே பணம் கூலியாகக் கொடுக்கப்பட்டது. ஒரு தொழிலாளியின் சராசரி வருட வருமானம் என்பது 12 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்குள் இருந்தது.

இந்திய வரலாற்றில், குறிப்பாக காலனிய காலத்தில், விவசாயிகள் தங்களது நிலங்களை இழந்ததுதென்பது புதியதாக நடந்த நிகழ்வொன்றும் இல்லை. அரசியல் சிரத்தன்மையற்ற நிலை, குடும்பப் பிரச்சினை அல்லது கடன் தொல்லைகளால் நிலங்களை இழந்து கொண்டே இருந்தனர். இவ்வாறு நிலங்களை இழந்த விவசாயிகள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றும் கடமையினால் விவசாயக் கூலிகளாக மாற்றமடைந்தனர். இழந்த நிலங்களை மீட்டு எடுக்க சிலர் முயற்சி செய்தனர். பெரும்பான்மையினர் கிராமங்களில் விவசாயக் கூலிகளாகவே தங்கிவிட்டனர். பெரும் நிலச்சு வான்தாரர்களும், பண்ணை முதலாளிகளும் தரும் தோட்ட வேலைகளை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் கட்டாய நிலைக்குள் தள்ளப்பட்டனர். பிரிட்டிஷ்-இந்திய ஆட்சி காலத்தில் தாமஸ் மன்றோ (Thomas Munroe) ரயத்துவாரி நிலவரி முறையை அறிமுகப்படுத்தினார். எதிர்பார்ப்புகளுக்கு எதிராக ரயத்துவாரி முறை இந்திய விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு ஏதும் தரவில்லை. இருப்பினும் ரயத்துவாரி முறை கால் நூற்றாண்டு காலம் பிரிட்டிஷ்-இந்திய காலனிய ஆட்சி காலத்தில் அமலாக்கபட்டுச் செயல்படுத்தபட்டு வந்தது.

இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஒரு சிறு பகுதியினரே 1,000 ஸ்டெர்லிங் அளவிற்கான சொத்துக்கள் வைத்திருந்தனர். 5,000 பக்கோடா அளவிற்கு செல்வம் சேர்த்து வைத்திருந்தவர்கள் மிக சிலரே. காலனிய அரசு இந்தியாவை எப்படி நிர்வகித்தது என சுப்பிரமணியன் தனது புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: “பிரிட்டிஷ்-இந்திய ஆட்சியாளர்களால் கடைபிடிக்கப்பட்ட பொருளாதாரத் கொள்கைகளினால் ஏழை எளிய மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நேர உணவை அலைந்து திரிந்து தேடிக் கொள்வது என்பதே வளமைமிக்க செயலாகக் கருதப்பட்டது. ஏறத்தாழ கால்நூற்றாண்டு கால பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பெனியினரின் ஆட்சியில் இந்திய மக்கள் சந்தித்தவை பசி, பட்டினிச் சாவுகள், வறட்சி மற்றும் பொருளாதாரச் சீர்குலைவுகளே.” இந்தியாவைத் தொடர்ந்து பஞ்சமும், வறட்சியும் தம்பிடிக்குள் வைதிருந்ததர்க்கு கம்பெனியினரின் சுயநலமான பொருளாதாரக் கொள்கைகளே காரணமாகியது.

நலிவுற்றிருந்த பாரம்பரியத் தொழில்களுக்கு காலனிய அரசு தொடர்ந்து ஆதரவு தராமல் போனதும், விவசாயிகளைப் பணப்பயிர்கள் மட்டும் உற்பத்தி செய்யத் தூண்டியதும் ஒட்டுமொத்த இந்திய பொருளாதாரத்தையும் சீர்குலைத்தது."

காலனிய அரசு இந்தியவில் அமல்படுத்திய நிலவரியும் அதனை வசூலித்த முறையும் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியது. ரயத்துவாரி முறை விவசாயக் குடும்பங்களை ஒரு வகையில் அழித்தது என்றால் மற்றொரு வகையில் அரசின் ஆதரவின்மையினால் திறமைமிக்கக் கைவினைஞர்கள் தொழில் வளங்களை இழந்து நின்றனர். விவசாய நிலங்கள் மீதும், தொழில்கள் மீதும் விதிக்கப்பட்ட அதிகபட்ச வரியும் அவற்றை வசூலிக்க வருவாய்துறை ஊழியர்கள் பின்பற்றிய வன்முறைகளும், நிற வேற்றுமை கடைபிடித்த காலனிய அரசும் இந்திய கிராமங்களில் வாழ்ந்து வந்த ஏராளமான விவசாயக் குடிகளை ஓட்டாண்டிகளாக்கி நகரங்கள் நோக்கி புலம்பெயரச் செய்தது.

இந்தியப் பெருங்கலகத்திற்கு சில வருடங்களுக்கு முன்பாக 1854-ல் இந்திய விவசாயிகள் தங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த ஏராளமான சுங்கங்களை நீக்க கோரி விண்ணப்பம் ஒன்றை காலனிய அரசுக்கு வழங்கினர். விண்ணப்பத்தில் கூறப்பட்டிருந்த வார்த்தைகள் அவர்கள் வரிச்சுமையினால் அடைந்திருந்த துன்பநிலையை எடுத்துக் காட்டியது. குடிநீர்வரி, வீட்டுவரி, தொழில்வரி, சாலைவரி, பாசனவரி, கிராமநிர்வாகவரி, பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறுக்குமதி வரி, நகர்ப் புறவரி என ஏராளமான சுங்கங்கள் அரசுக்குச் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

சுங்கம் வசூலிப்பதற்காக வருவாய்த் துறையின் அதிகாரிகள் பின்பற்றிய நடைமுறைகள் குறித்து ஏராளமான குற்ற சாட்டுகள் எழுந்தன. ஆகையால் காலனிய அரசு குழு ஒன்றை நியமித்து விசாரனண மேற்கொள்ளச் செய்தது. மதராஸ் மாகணத்தில் நடைபெற்ற விசாரனண குறித்து அக்குழு வழங்கிய அறிக்கையின் மூலம் விவசாயிகளின் வாழ்விலிருந்த வறுமையும் துன்பமும் உலகோர்க்கு வெளிச்சம்மிட்டுக் காட்டபட்டது. வருவாய்துறை அதிகாரிகள் வரிகளை செலுத்தவதற்கு காலதாமதம் செய்த நபர்கள் மீதும், வரிகளைச் செலுத்த மறுத்தவர்கள் மீதும் வன்முறைகளைப் பயன்படுத்தியது உண்மை என விசாரணை குழு ஒத்துக்கொண்டது. சுங்கம் வசூலிப்பதாக கூறிக்கொண்டு வருவாய்த் துறை அதிகாரிகள் ஏராளமான பொதுமக்களையும், தனி நபர்களையும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு பல்வேறு காரணங்களுக்காக சித்தரவதை நடவடிக்கைகள் மூலம் பழிவாங்கினர். சித்தரவதை நடவடிக்கைகள் குறித்து மதராஸ் மாகண விசாரனண குழு வழங்கிய அறிக்கையிலிருந்து சில சான்றுகள்: "மதுரைச் சரக கிறிஸ்துவ மதப் போதகர் பாதிரியார் சி. எப். முன்சி (C.F. Muzy) "வருவாய்த் துறை ஊழியர்கள் சுங்கம் வசூலிப்பதாக சொல்லிக் கொண்டு நான்கு அல்லது ஐந்து கயிறுகள் ஒன்றாக பிணைக்கபட்டு உருவாக்கப்பட்டிருந்த நான்கடி நீளம் கொண்ட சாட்டையால் விவசாயிகளைத் தாக்குவதைத் தாம் நேரில் கண்டதாகாவும் மேலும் வழங்கிய சித்ரவதைத் தண்டனை குறித்து மாவட்ட ஆட்சியாளரிடம் "புகார் மனு வழங்கி சாட்சியளித்தார்."

கொடூரத் தண்டனைகள் குறித்து விசாரணை மேற்கொண்ட அதிகாரிகளிடம் நெசவுத் தொழிலாளி ஒருவர் தமக்கு நேர்ந்த அனுபவத்தை சாட்சி தெரிவித்தார்: "எனது தொழில் நெசவு செய்வது அதற்காகப் பத்து தறிகளை வைத்துள்ளேன். அவற்றிற்கு நாற்பது ரூபாய் அரசு முத்தரப்பா வரியாக நிர்ணயித்துள்ளது. கடந்த ஆடி மாதம்

பிராமண ஜில்லாதாரர் என் வீட்டிற்கு வந்து வரி நிலுவைத் தொகையை உடனடியாக செலுத்தும்படி கேட்டார். நான் மறுநாள் தருவதாகச் சொன்னேன். ஆனால் என் வார்த்தையின் மீது நம்பிக்கையற்று என்னை நடுத்தெருவிற்கு இழுத்து வந்து கையில் இருந்த பிரம்பினால் சரமாரியாக அடித்து விட்டார். என் முகத்தில் காரி உமிழ்ந்து சந்தைப்பகுதிக்கு என்னை இழுத்து வந்தார். அங்கே என்னைப் போன்று வரி செலுத்த முடியாத 50 பேர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் என்னை அந்த நாள் முழுக்க அங்கேயே நிற்க வைத்தனர். மறுநாள் நிச்சயமாக வரி செலுத்திவிடுவேன் என எனது உறவினர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே என்னை விடுதலை செய்தார். இருபது நாட்களுக்கு முன்பு அதே பிராமண ஜில்லாதாரர் எனது வீட்டிற்கு மீண்டும் வந்து இவ்வருடத்திற்கு நான் செலுத்த வேண்டிய சுங்கத்தை ஒரே தவணையில் செலுத்துமாறு எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றுள்ளார். ஒவ்வொரு வருடமும் பிராமண ஜில்லாதாரர் இத்தகையக் கொடுமைகளைத் தொடர்சியாக செய்து வருகிறார்."

பொதுமக்கள் மீது வருவாய்த் துறையினர் மேற்கொண்ட சித்தரவதை நடவடிக்கைகள் குறித்து மதராஸ் மாகாணத்தில் மட்டும் 496 வழக்குகள் விசாரணைக் குழுவிடம் பதிவுசெய்யபட்டது. அவற்றில் 314 வழக்குகள் உண்மை என நிருபிக்கப்பட்டது. இந்தியன் பேட்ரியாட் என்கின்ற பத்திரிக்கை மதராஸ் மாகாணத்தின் நிலை குறித்து பின்வருமாறு எழுதியது: "மதராஸ் மாகாண சட்ட அவையில் விவசாயிகளின் அவலநிலை குறித்து கவனஈர்ப்புத் தீர்மாணம் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் நடுவே விவசாயிகள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஆதாரத்தை பல்வேறு தொழில்கள் செய்து பெறுகின்றனர் எனப் பதிவுசெய்யப்பட்டது. அப்படி எனில் அவர்கள் செய்த தொழில்கள் என்ன என்ன? வீட்டிலிருந்து செய்யக்கூடிய சிறு தொழில்களா? இன்றைய நிலையில் பெரும்பான்மையான விவசாயக் குடும்பங்கள் ஒரு வேளை உணவிற்கே வழியற்றுப்போய் உள்ளனர் என்பது நாம் எல்லோரும் நன்றாக அறிந்த செய்தி. சுத்தம் என்ற பேச்சுக்கே அவர்களிடம் இடமில்லாத அளவுக்கு நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் பரம ஏழைகள். நாகரிகமாகச் சுட்டிக் காட்டி எனது வீடு என்று சொல்வதற்குக் கூட அவர்களிடம் ஏதும்மில்லை. தங்கள் வாழ்கையின் தரத்தை மேலான நிலைக்கு எடுத்துச்செல்ல தேவையான நம்பிக்கையும், இலக்கும் அற்றவர்களாக இருக்கின்றனர். கடின உழைப்பால் தங்கள் வறுமைநிலையை ஒருநாள் மாற்றிட முடியும் என்கின்ற நம்பிக்கையும் இழந்து விட்டனர். பஞ்சம் அவர்களின் வாழ்வை கேள்விக்குள்ளாகி உள்ளது. வறுமை, பசி, பட்டினி அவர்களின் வாழ்வின் இயல்பாகிபோனது. இருப்பினும் அரசு அவர்களின் வறுமை நிலையைப் போக்கத் தேவையான எந்த நடவடிக்கையும் எடுக்க தயாராக இல்லை. அதேநேரம் தனக்கு வரவேண்டிய நில வரிப்பாக்கி 32 கோடி ரூபாய் பணத்தை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு முனைப்புக்காட்டி வருகின்றது. இந்தியாவிலிருக்கும் எந்த நியாயவானும் நிலவரிப் பிரச்சனைகள் குறித்துப் பேசுவதற்கோ, விவாதிப்பற்கோ தயாராக இல்லை. எந்த லாயல் சார்ஜ்-ம் (Loyal George) இந்தியாவிற்கு வந்து விவசாயக் குடிகள் இழந்த வாழ்வாதாரத்தை மீட்டுத் தரப்போவதில்லை. எப்படித்தான் கோடிக்கணக்கான இந்தியர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறப் போகிறார்களோ தெரியவில்லை? இத்தகு கேள்வியை காலனிய அரசு நிச்சயமாக எதிர் கொண்டு தீர்வு சொல்ல வேண்டிய நாள் வரும். கோடிக்கணக்கான இந்தியர்கள் தொடர்ந்து கடினமாக உழைக்கின்றனர்.

இருப்பினும் அவர்களின் வாழ்க்கை மட்டும் ஏனோ உண்ண உணவில்லாமல் சிறிய இருட்டு நிறைந்த குடிசை வீடுகளுக்குள்ளே முடங்கிவிடுகின்றன. இத்தகைய இழிநிலையில் நாம் உயர்வான இங்கிலாந்தின் காலனிய ஆட்சியில் உயர்ந்தவர்களாக இருக்கிறோம் என எப்படி உலகினரிடம் கூறமுடியும்?"

## குறுந் தொழில்களின் அழிவு

காலனிய காலத்தில் இந்தியாவின் கைத் தொழில்கள் எவ்வாறு அழிவைச் சந்தித்தது என தீர்த்தங்கராய் பின்வருமாறு எழுதுகிறார்: "இந்திய மக்கள் மேற்கொண்ட தொழில்களில் கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் முக்கிய இடம் பெற்றிருந்தது. அந்த காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இயந்திரத் தொழில் புரட்சிக்கு இணையாக இந்திய கைத்தொழில்களும் வளர்ச்சி அடைந்திருந்தன. இந்தியாவைப் பொருத்தவரைக் கைவினைஞர்களின் உழைப்பு தொழில்களின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணியாகியது. பொதுவாகவே 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் உலக அளவில் கைவினைஞர்களின் வளச்சியும், வீழ்ச்சியும் மாறி மாறி நடந்தது. அதே காலத்தில் ஐரோப்பாவைப் பொருத்தவரை முதலாளித்துவ வர்க்கம் இயந்திரத் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்காகப் பெருமளவில் முதலீடுகள் செய்யத் தொடங்கியிருந்தனர். இங்கிலாந்தின் இயந்திரத் தொழில் நுட்ப வளர்ச்சி இந்தியாவின் பாரம்பரியத் தொழில்களை, குறிப்பாக நெசவுத்தொழிலை முற்றிலும் அழித்தது என்றால் அது மியையாகது. பிரிட்டிஷ் இயந்திரத் தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் பிரிட்டிஷ்-இந்திய காலனிய அரசு உருவாக்கிக் கடைபிடித்த ஏற்றுமதி இறக்குமதி தொழிற்கொள்கை மூலம் இந்தியா வந்தடைந்தன. அவை இந்தியச் சந்தைகள் எங்கும் விற்கபட்டதன் விளைவாக நெசவு உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இலாபத்தையும், நஷ்டத்தையும் இந்திய கைவினைஞர்களுக்கு மாறிமாறிக் கொடுத்து நெசவுத் தொழிளின் வீழ்ச்சிக்குக் காரணம் ஆகியது. சுருங்கச் சொல்வதென்றால் ஐரோப்பிய உலகின் தொழிற்புரட்சி ஒட்டுமொத்த உலகின் ஒரு பகுதி மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தை கொடுத்துவிட்டு மற்றொரு பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழித்துவிட்டது."

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் நெசவுத்தொழில் மேற்கொண்டவர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததார். கிழக்கு இந்தியக் கம்பெனி முகவர்களிடம் முன்பணம் பெற்றுக்கொண்டு நெசவு தொழில் செய்வதன்மூலம் அவர்கள் அடைந்த துயரத்தையும் நன்கு அறிந்திருந்தார். நெசவுத் தொழில் செய்பவர்கள் ஒரு முறை கிழக்கு இந்திய கம்பெனி முகவர்களிடம் இருந்து முன்பணம் வாங்கிவிட்டார்கள் என்றால் கம்பெனியினருக்கு "அடிமைகளாக உழைக்க வேண்டும். தாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை முன்பணம் பெற்ற கம்பெனி முகவர்கள் தவிர வேறு யாருக்கும் விற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். சுருக்கமாகச் சொல்வோமானால் நெசவுத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக குறிப்பிட்ட கம்பெனி முகவருக்கு ஊழியம் செய்யவேண்டி இருந்தது. தங்களின் வறுமையின் காரணமாக முன்பணமாக பெற்றிருந்த கடன் தொகையைத் திருப்பி செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளபட்டிருந்தனர். இவ்விதமாக நெசவாளர்கள் காலத்திற்கும் கம்பெனியினரின் அடிமைகளாயினர்.

தென் இந்தியாவிலிருந்த தமது அனைத்து தொழிற்சாலைகளையும் 1824-இல் கிழக்கு இந்திய கம்பெனி எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் மூடியதன் விளைவாக தமிழ்நாட்டின் அத்தனை மாவட்டங்களிலிருந்த நெசவாளர்களின் வாழ்க்கை கேள்விக்குள்ளானது. இவற்றிற்குச் சாட்சியாக அனந்தரங்கபிள்ளை தனது நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறார்:

"மதராஸ் மாகாணம் முழுவதும் துன்பமும், வறுமையும் பரவி இருக்கிறது. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் பசி, பட்டினியால் மடிந்து போய்விட்டனர். இவர்களில் பெரும்பான்மையினர் தங்களது உயிரை காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் வேறு எந்த வழியும் இல்லாமல் இலங்கை, பர்மா, மொரிஷியஸ்க்கு புலம் பெயர்ந்து செல்லுகின்றனர்."

1840-ஆல் கோதாவரி மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு அளித்த அறிக்கையில் ஏராளமான நெசவுத் தொழிலாளர்கள் தமது மாவட்டதிலிருந்து பர்மாவிற்குப் புலம்பெயர்ந்து செல்வதாக பதிவு செய்தார். 1863-இல் விசாகப்பட்டினத்தின் மாவட்ட ஆட்சியாளர் அனேக நெசவுத் தொழிலாளர்கள் அண்டை மாநிலங்களுக்கு புலம் பெயர்வதாக அறிக்கை சமர்பித்தார். பிற மாவட்ட ஆட்சியாளர்களும் தங்களது அறிக்கைகளில் மேற்சொன்ன நிகழ்வுகளையே குறிப்பிட்டனர்.

குறுந்தொழில்களின் வீழ்ச்சியோடு மக்கள்தொகை பெருக்கம் இணைந்ததன் விளைவாக வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. வறுமையின் பிடியில் சிக்கிய கிராமத்தினர் கிடைத்த வேலைகளைச் செய்யத் தலைப்பட்டனர். குறுந்தொழில்களின் அழிவு "சட்டப்பூர்வ ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள்" என்ற முறையை இந்தியாவிற்குள் அறிமுகப்படுத்தபடுவற்கு முக்கிய காரணமாகியது. இவ்வகையில் "கிழக்கு மற்றும் தெற்கு ஆசிய நாடுகள், மலேயா, பர்மா, இலங்கை, மேற்கு இந்திய தீவுகள், மொரிசீயஸ், பிஜி தீவுகள் என உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஆங்கிலேயர்களால் இந்திய கூலித் தொழிலாளர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

## தொடர்சியாக இந்தியாவை சீர்குலைத்த பஞ்சங்கள்

18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் மிக பலவீனமாக இருந்த காரணத்தால் தொடர்ச்சியாக வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டது. மதராஸ் மாகாணம், பாம்பே மாகாணம், கல்கத்தா மாகாணம் வறட்சி மற்றும் பஞ்சத்தின் கொடுரமான பாதிப்புகளைச் சந்தித்தன. 1770-க்கும் 1878-க்கும் இடைப்பட்ட காலத்தில் இருபது முறை இந்தியா பஞ்சத்தின் தாக்குதலுக்கு ஆட்பட்டது. 1770-இல் கீழ்-வங்காளமும், பீகாரும் பஞ்சத்தின் பின் விளைவுகளைச் சந்தித்தன. ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் அங்கே பஞ்சத்தால் உயிர் இழந்தனர். இது இங்கு வாழ்ந்த மக்களின் மூன்றில் ஒரு பகுதி மக்களின் அழிவாகும். 1781 மற்றும் 1782-இல் மதராஸ் மாகாணத்தில் ஏற்பட்டிருந்த வறட்சியோடு ஆங்கிலேயர்கள் கைதர்அலியோடு செய்த போரின் விளைவாக மாகாணாத்தின் பொருளாதாரம் முற்றிலும் நலிவடைந்தது. 1791-இல் வட மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சி பாம்பே பகுதிகளை வெகுவாகப் பாதித்தது. இத்தகைய வறட்சி மிக எளிதில் 1792-இல் பஞ்சமாக மாறியது. இதன் விளைவாக 1,200 இந்தியர்கள் விசாகப்பட்டின மாவட்டத்தில் உயிர் இழந்தனர்.

பஞ்சகாலத்தில் நிகழ்ந்த ஏராளமான உயிரிழப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை காலனிய அரசு மேற்கொள்ளாதது குறித்தும் பெற்ற பிள்ளைகள் வறுமையின் காரணமாக சந்தைகளில் அடிமைகளாக விற்பனை செய்யபட்டது குறித்தும் ஏராளமான செய்திகள் மக்கள் மத்தியில் பரவிக் கிடந்தன. பசியினால் தூண்டப்பட்ட ஏராளமான ஏழை மக்கள் உணவு தானியங்களைப் பதுக்கி வைத்திருந்த கடைகளையும், வீடுகளையும் தாக்கிக் கொள்ளையடித்தனர்.

1812-1813 மற்றும் 1824-இல் குண்டூரில் ஏற்பட்ட பஞ்சத்தின் வீச்சு கடுமையாக இருந்தது. 1833-இல் ஏற்பட்ட பெரும் பஞ்சம் ஏராளமான உயிர்களைப் பழிவாங்கியது.

குண்டூர் பஞ்சத்தின் தாக்கம் வடமாநிலங்களிலும் உணரப்பட்டது. குறிப்பாக மசூலிப்பட்டிணம் பொருள்கள் கிடைப்பின்மையினால் பாதிப்பிற்குள்ளானது. ஏராளமான கால்நடைகளும், விலங்குகளும், விவசாய மக்களும் வாழ்வாதாரங்கள் ஏதுமற்ற நிலையில் கிராமங்களிலே மடிந்துபோயின. பஞ்சம் எப்படி மக்களை அன்னிய தேசங்களுக்கு புலம்பெயரத் தூண்டியது என சாரதா ராஜூ பின்வருமாறு குறிப்பிடுகிறார்: “நெல்லூர் சாலைகள் முழுவதும் பிணங்கள் குவிந்து கிடந்தன. 10,000 மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் புலம் பெயர்ந்தனர், அங்கு அவர்களுக்கு உணவு கிடைக்காமல் திணறித் திரிந்தனர். உணவு தேடி நகரங்களுக்கு வரும் வழிகளிலே ஏராளமானோர் மடிந்து போயினர். ஒவ்வொரு நாளும் தெருக்களில் உயிர் இழந்து கிடப்போரின் எண்ணிக்கை கணக்கிட முடியாத அளவுக்கு இருந்தது. குண்டூர் பஞ்சம் ஏழைகளை மிக ஏழைகளாக மாற்றியது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் மடிந்து போனதாக அம்மாவட்ட ஆட்சியாளர் அறிக்கை சமர்பித்தார். மேலும் மூன்றில் இரண்டு பங்கு கால்நடைகளும் உயிர் இழந்ததாகப் பதிவுசெய்தார். பஞ்சத்தினால் ஏற்பட்ட துன்பத்தை வார்த்தைகளால் சொல்ல இயலாத அளவிற்கு இருந்தது. குறிப்பாக எந்தவொரு மனிதனையும் சுட்டிக்காட்டி ஆரோக்கியமான உடல்நிலையில் இருந்தார் என கூற முடியாத நிலையே நிலவியது.” இருபது வருடங்களுக்கு பின்பு மாவட்ட மக்கள் நலக்குழு அளித்த அறிக்கையில் பஞ்சத்தின் தாக்கத்திலிருந்து குண்டூர் இன்னும் விடுபடவில்லை என பதிவு செய்தது. பஞ்சத்தினால் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தாக கணக்கிடப்பட்டது.

இந்தியாவில் நிலவிய பஞ்சம் குறித்து 1877-ல் கவர்னர் ஜெனரலும் வைஸ்ராயுமாகிய பிரபு லைட்டன் (Lord Lytton) நிதிக்குழு உறுப்பினர்கள் அவையில் பின்வருமாறு பேசினார்: “ தற்சமயம் எனக்கு ஏராளமான ஆலோசனைகளைப் பல்வேறு தரப்பினர் தந்துக்கொண்டு இருக்கின்றனர். இவை எனக்கு எரிச்லோடு கூடிய நகைப்பை தருகின்றது. தற்கால நிலையில் பாட்னாவில் கண்டுபிடிக்கப்பட்ட பழமைவாய்ந்த மிக பெரிய உணவுதானியக் கிடங்கில் “பஞ்சத்திலிருந்து இந்த பகுதி மக்களை நிரந்தரமாக காப்பற்றுவதற்காக” என பொறிக்கபட்டிருந்த புகழ்பெற்ற வாசகத்தை ஆபத்து விளைவிக்க கூடிய அளவிற்கு தவறாகப் பேசத் தொடங்கி இருப்பதை நான் முக்கியம் வாய்ந்ததாக கருதுகிறேன். தற்சமய நிலையில் நான் மூன்று விசயங்கள் முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டும் என்று நினைக்கின்றேன். முதலில் இந்தியர்களின் புலம்பெயர்வு குறித்தும், இரண்டாவதாக இந்தியாவில் நடைபெற்று வரும் ரயில்வே திட்டப் பணிகள் குறித்தும், மூன்றாவதாக பாசனத் திட்டங்கள் குறித்தும் விவாதிக்க விரும்புகின்றேன். இந்தியாவில் தற்சமயம் நிலவும் சூழ்நிலையில் மேற்சொன்ன மூன்று பிரச்சனைகளுக்கும் ஒரே நேரத்தில் தீர்வு காண்பது என்பது இயலாதகாரியம் ஆகும். இந்தியர்கள் உற்பத்தி செய்யும் உணவு தானியங்கள் பெருகிவரும் மக்கள் தொகைக்கு இணையானதாக இல்லாத காரணத்தால் பஞ்சத்திலிருந்து தப்பிப்பதற்கு தற்காப்பு நடவடிக்கையாக மக்கள் புலம் பெயர்ந்து செல்கின்றனர். மக்கள் தொகை பெருக்கத்தினால் மிதமிஞ்சி இருப்பவர்கள், குறிப்பாக உடல் உழைப்பில் திறம் பெற்று இருப்பவர்கள், இதுவரை தாங்கள் அனுபவித்திருக்காத புதிய இன்பங்களையும், மேம்பட்ட வாழ்க்கையும் வாழவேண்டி அதிகபட்ச ஊதியத்திற்காக அன்னியதேசங்களுக்குப்புலம்பெயர்கின்றனர். இந்தியாவில் நிலவும் வறட்சி மற்றும் பஞ்சகால நிலையில் மாற்றம்மடைந்து வளர்ச்சிப் பாதையில் சென்றால் மட்டுமே புலப்பெயர்விற்கு எதிராக இருக்கும் நீதிக்குப் புறம்பற்ற கருத்துகளுக்கு நியாயம்

சொல்ல முடியும், குறிப்பாக இந்தியர்கள் புலப்பெயர்விலிருந்து மீண்டு வரமுடியும். பஞ்சத்தோடு நாம் செய்துகொண்டிருக்கும் போராட்டத்திற்குப் புலப்பெயர்வால் மட்டும் தீர்வு கண்டுவிடமுடியாது. ஓட்டு மொத்த மக்கள் தொகையில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே அதிக அளவு உணவு உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கின்றனர். இப்பொழுதே சில கட்டுப்பாடு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளாமல் தவிர்த்தால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் மக்கள் தொகை பெருக்கம் நமக்கு சந்தேகத்திற்கு இடமின்றி மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிகளைத் தரப்போகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வறட்சியாலும், வறுமையாலும் ஒவ்வொரு சதுரகிலோ மீட்டரிலும் வாழும் 250 மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் ஏராளமான நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டு உள்ளன. இவற்றை ஒப்பு நோக்குகையில் விவசாயத்தை மேம்படுத்தினால் உணவுப் பஞ்சம் தீர்க்கப்படுவதற்கு வழி கிடைக்கும் எனத் தெரிகிறது. விளைநிலங்கள் பயிர் செய்யாமல் கிடப்பது என்பது மாவட்டதிற்கு மாவட்டம் அளவில் மாறுபடுகின்றது. பிரிட்டிஷ்-இந்திய அரசு இந்திய மக்களை பிரிட்டிஷ் காலனிய நாடுகளுக்குப் புலம்பெயரச் செய்வதற்கான தூண்டுதலுக்குப் போதுமான ஏற்பாடுகளை செய்துள்ளது. புலம்பெயர விரும்பும் கூலித் தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைக்க காலனிய அரசு பரந்தளவில் முகாம்களையும், முகவர்களையும் நியமித்து உள்ளது. சில வருடங்கள் தற்காலிகமாக இந்தியர்கள் புலம்பெயர்ந்து சென்று வேலை செய்துவிட்டு கைநிறைய பணத்துடன் திரும்பிவந்து தங்களின் ஓட்டுமொத்த வாழ்நாள்களுக்கும் தேவையானவைகளை செய்துக் கொள்ளமுடியும். குறிப்பாக சொந்தமாக நிலம் வாங்கி விவசாயம் செய்யதுக் கொள்ளமுடியும். இவற்றிற்காக சிறிது காலம் அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து இருக்க வேண்டும். இவ்வளவு நன்மைகள் புலம் பெயர்வில் இருந்த பொழுதும் இந்தியர்கள் தொடர்ந்து புலம் பெயர மறுத்து வருகின்றனர். பஞ்சகாலத்தில் தங்கள் கிராமங்களில் இருக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து எவ்வித புகார்களையும், குற்றச் சாட்டுகளையும் தெரிவிக்காத இந்திய விவசாயிகளை எண்ணுகையில் அவர்கள் மீது எனக்கு அனுதாபம் ஏற்படுகிறது. மேற்கத்திய உலகில் உள்ள எந்தவொரு நாடும் இவ்வளவு கொடிய மிக நீண்ட பஞ்சத்தை 24 மாதகால அளவிற்கு கண்டது இல்லை. காலனிய அரசின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ள அரைப்பகுதி இந்திய நிலப்பரப்பு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய வறட்சி முட்டாள்களையும், பசித்திருக்கும் விவசாயிகளையும் கூட எந்தவொரு தவறு செய்யவும், சமூக அமைதியைக் கெடுக்கும் காரியங்களைச் செய்யவும் தூண்டாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது"

பஞ்சகால மீட்பு நடவடிக்கைகள் செயலற்று போனதன் விளைவாக மக்கள் தொடர்ந்து இலைதழைகளையும் கிழங்குகளையும் வேர்களையும் உண்டனர். ஆகையால் பெரும்பான்மையான மக்கள் உடல்நலமற்றவர்களாக ஆகினர். 21 பிப்ரவரி 1893-இல் கர்நாடக பிரகாசிகா என்ற பத்திரிகை அன்றைய இந்தியாவின் நிலையை எடுத்துக்காட்டும்படி கட்டுரை ஒன்றை பின்வருமாறு எழுதியது: "பஞ்சகால மீட்புக் குழு அறிக்கை தயார் செய்துவிட்டு தறசமயம் மதராஸ் நகரில் இருக்கின்றது. தமது அறிக்கையை வெளியிடப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே அக்குழு தயார் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் பஞ்சகால மீட்புக் குழு என்பது பொதுப் பணத்தை வீணடிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. ஏராளமான அரசு அதிகாரிகள் தங்களுடைய பஞ்சகால அனுபவங்களைச் சாட்சியாக விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்திருந்த பின்பும்

தமது அறிக்கையில் பஞ்சத்திலிருந்து மக்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுப்பது குறித்தோ, மக்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தோ ஏதும் சுட்டிக் காட்டாமல் விட்டுவிட்டது." கிருஷ்ண பத்திரிகா என்ற இதழ் மக்களைப் பின்வருமாறு எச்சரிக்கின்றது. பஞ்சகால உயிரிழப்புகள் குறித்தும் பரவிவரும் தொற்று நோய்கள் குறித்தும் பஞ்சகால விசாரணைக் குழுதனது அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பதிவுச் செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக அறிவுறுத்தியது. வறுமையின் காரணமாக அதிகமாகிக் கொண்டே போகும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டாக்கியுள்ளது எனவும் குறிபிடுகிறது.

இறுதியாக: அடிமைமுறை ஒழிப்பு மற்றும் மதராஸ் மாகாணத்திலிருந்து புலப் பெயர்வு செய்யும் தொழிலின் அடிப்படையில் இந்தியர்கள் புரையோடிப் போயிருந்த சாதிகளின் அடிப்படையில் பிளவுபட்டு கிடந்தனர். உயர்சாதி இந்துக்களால் தீண்டாமை புகட்டப்பட்டு அடித்தளமக்கள் பொருளாதார அடிப்படையில் ஒடுக்கப்பட்டனர். நிலம் என்பது முழுக்க முழுக்க உயர் சாதிகளின் கட்டுபாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்ததால் தீண்டாமை சாத்தியப்பட்டது. அடித்தள மக்களின் உயிர் ஆதாரம் நிலங்களில் உழைப்பதன் மூலம் பெறப்பட்டது. ஆனால் உழைக்கின்ற நிலம் மற்றும் அதில் விளைகின்ற பொருள்கள் உழைக்கின்றவர்களுக்கு சொந்தமில்லாமல் இருந்தது. இத்தகைய நிலை மேலும் காலனிய காலத்தில் சீர் கெட்டுப் போவதற்கு நிலவரி அதிகரிப்பும் அவற்றை வசூலிப்பதற்காகப் பண்ணையார்கள் செய்த கொடுமைகளும் காரணங்கள் ஆகியது.

பணத்தை வரியாகச் செலுத்தும்படி எப்பொழுது காலனிய நிலவரி முறை இந்திய விவசாயிகளை நிர்பந்தித்ததோ அக்கணம் முதல் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை மேலும் துயரத்திற்குள்ளானது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இந்தியச் சந்தைகளில் விற்கப்பட்ட பொருள்களால் இந்தியாவின் பூர்வத் தொழில்கள் அழிவை சந்தித்தது, குறிப்பிட்டுச் சொன்னால் கிராமப்புறங்களின் வளமை என்பது சீர்க் கெட்டுப் போனது. இதன் விளைவாக நூற்றுக்கணக்கான நெசவாளர்களும், கைவினைஞர்களும் தம் தொழில்களை விட்டுத் தூக்கி எறியப்பட்டனர். ஏற்கனவே நிலவரியைச் செலுத்த முடியாத காரணத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த விவசாய குடும்பங்களுக்குக் கைத்தொழில்கள் மூலம் கிடைக்கப்பட்ட வருமானமும் தடைப்பட்டு போனதால் நிலை குலைந்து போயினர். இவ்விதமாக இந்திய விவசாயிகளும் கைவினைஞர்களும் பாரம்பரியத் தொழில்களை விட்டுவிட்டு ஓட நேர்ந்தது. இத்தகைய வாழ்நிலை தொழிலாளர்களை மனதளவில் அன்னிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று வேலை செய்யத் தயார்செய்தது.

பிரிட்டிஷ் காலனிய காலத்திற்கு முன்பு தமிழர்கள் ஸ்ட்ரைட் குடியிருப்புகளுக்கு (Strait Settlements) புலம் பெயர்ந்து இருந்தனர். இவர்கள் ஸ்ட்ரைட் குடியிருப்புகளில் வீட்டு வேலைகள் செய்வதற்கும், விவசாய வேலைகள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ்-இந்திய அரசு இந்தியர்களை இலங்கைக்கு புலம் பெயரச் செய்த முயற்சி தோல்வியல் முடிந்தது. 1815-இல் மதராஸ் ஆளுநர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருக்கு அம்மாவட்ட தமிழர்களையும், வீட்டு விலங்குகளையும் இலங்கைக்கு புலம் பெயரத் தூண்டச் செய்ய தனது அதிகாரத்தை பயன்படுத்தும்படியாக உத்தரவு ஒன்று

பிறப்பித்தார். இதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் மதராஸ் அரசுக்கு பின்வருமாறு எழுதினார்: "தமிழர்கள் இலங்கைக்கு புலம் பெயர வேண்டுமானால் இலங்கை அரசு தமது முகவர்களை அனுப்பி அவர்கள் மூலம் சிறப்புப் பரிசுகள் கொடுத்தால் மட்டுமே கூலித் தொழிலாளர்கள் இலங்கைத் தோட்டங்களுக்கு புலம் பெயர்வது சாத்தியப்படும்." இவ்வாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் எழுதக் காரணம் அம்மாவட்ட மக்கள் தமது நிலங்களிலிருந்து கிடைத்த அதிக செலவினங்களற்ற வாழ்க்கையை விட்டு விட்டு வேறு இடங்களுக்குப் புலம்பெயர விருப்பமின்றி இருந்ததே ஆகும்.

இயல்பாகவே இலங்கை அரசு தென்-இந்திய பகுதிகளிலிருந்து தங்கள் தோட்டங்களுக்கு வேலை செய்யத் தேவைப்பட்ட குறைந்தபட்ச ஊதியக் கூலித் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முகவர்கள் கொண்ட தனியார் நிறுவனங்களை ஏற்படுத்தியது. 1818-ஆல் இலங்கை துணைப் பொதுக் கண்காணிப்பாளர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருக்குபின்வருமாறு எழுதுகிறார்: "ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களை நேரடியாக பெறுதற்குரிய தேவையான ஒப்பந்தங்களை இலங்கை அரசு தமிழக முகவர்களிடம் செய்துள்ளது. அவர்கள் 600 கூலித் தொழிலாளர்களை தென்-இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்புவதாக ஒப்புக் கொண்டுள்ளனர்."

சட்டப்பூர்வ ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறை இலங்கையில் அறிமுகப்படுத்தபடுவதற்கு முன்பே 1828-ஆல் இலங்கை அரசு தென்-இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டக் கூலித் தொழிலாளர்களைத் தங்களது காப்பித் தோட்டங்களில் பயன்படுத்தினர். இவ்வாறு இலங்கைத் தோட்டங்களுக்கு புலம் பெயர்ந்த இந்திய கூலித் தொழிலாளர்கள் சிலநாள்களுக்கு உள்ளாகவே வேலைப்பளு தாங்கமுடியாமல் தோட்டங்களை விட்டு வெளியேறித் தலைமறைவு வாழ்க்கை மேற் கொண்டனர். இவர்களில் பெரும்பான்மையினர் ஒருவருட காலத்திற்குள்ளாகவே இலங்கையிலிருந்து தப்பித்துத் தமது ஊர்களுக்கு வந்துவிட்டனர்.

1833-இல் இங்கிலாந்து அரசு தமது அதிகாரத்தின் கீழ் இருந்த நாடுகளிலிருந்து அடிமைமுறையை ரத்து செய்தது. இதன் விளைவாக பிரிட்டிஷ் காலனிய நாடுகளிலிருந்த வெள்ளை முதலாளிகளின் தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. தோட்டங்களை பராமரிப்பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் தேவைப்பட்ட கூலித் தொழிலாளர்களை தமது நாட்டிலிருந்து பெறமுடியாத நிலையில் இருந்தனர். தொடர்ச்சியாக நிலவிய தொழிலாளர் பற்றாக்குறை வெள்ளை முதலாளிகளின் கருவூலங்களைக் காலிசெய்தது. குறிப்பாக தொழிலாளர் பற்றாக்குறையினால் நட்டல் (Natal), மொரிசியஸ், பிரிட்டிஷ் கயானா (British Gauiana), மேற்கு இந்திய தீவுகள் (West Indies), பிஜி தீவுகள் (Fiji Island) கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. தங்களது மூலதனங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தோட்டங்களுக்குத் தேவைப்பட்ட கூலித் தொழிலாளர்களை உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து கொண்டு வருவதற்கான முயற்சிகளை வெள்ளை முதலாளிகள் செய்ய ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் தேவைப்பட்ட தொழிலாளர்களை ஜாவா பகுதிகளில் வாழ்ந்த சீனர்களை இறக்குமதி செய்வதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்மென நம்பினர். ஆனால் வெள்ளை முதலாளிகளின் எதிர்பார்ப்புக்கு எதிராக அமைந்தது. சீனத் தொழிலாளர்கள் தாங்கள் செய்கின்ற வேலைகளுக்கு ஏற்ப அதிகபட்ச ஊதியம் கோரினர். இத்தகைய கோரிக்கை முதலாளிகளுக்கு எரிச்சலை ஊட்டியது. "சீனத்து கூலித் தொழிலாளர்கள் கடினமாக உழைக்காமல் ஆடம்பர வாழ்க்கைவாழ அதிகபட்ச ஊதியம் கேட்பதாக வெள்ளை முதலாளிகள் குறை கூறினர். சீன தொழிலாளர்களுக்குப் பதிலியாக மேட்ரீட்

(Madrid) மற்றும் கிரியோல்ஸ் (Creoles) பகுதிகளிலிருந்த போர்த்துக்கீசயத் தொழிலாளர்களை கொண்டுவந்து தோட்ட வேலைகளில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளை வெள்ளை தோட்ட முதலாளிகளின் கூட்டமைப்பு மேற்கொண்டது. இருப்பினும் போர்த்துக்கீசயத் தொழிலாளர்கள் கிடைப்பிலும் சிக்கல்கள் ஏற்பட்டது. நாட்டல் மற்றும் கேப் காலனியில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் தோட்ட வேலைகள் செய்வதற்குத் தயாராக இல்லை. அவர்கள் தொழில்கள் செய்து தோட்டங்களுக்கு முதலாளிகள் ஆகுவதையே இலட்சியமாகக் கொண்டிருந்தனர்.

இறுதியாகத் தோட்ட முதலாளிகளின் கூட்டமைப்பு இந்தியாவில் கிடைக்கும் குறைந்தபட்ச ஊதிய கூலித் தொழிலாளர்களைத் தோட்டங்களுக்குக் கொண்டுவருவதில் முனைப்புக் காட்டத் தொடங்கினர். அடிமை முறை ஒழிப்பு அறிவிக்கபட்டவுடன் ஆப்பிரிக்கக் கருப்பின மக்கள் விளை நிலங்களில் செய்யும் கடின வேலைகளை விட்டு நிரந்தரமாக வெளியேற விரும்பினர். அவர்கள் சுதந்திரமாக தங்களது வாழ்விடங்களில் நாடோடி வாழ்க்கையை தொடர விரும்பினர்.

1833-இல் முறைப்படியான இந்தியர்களின் புலப்பெயர்வு மலேயாவிற்கும், ஸ்ட்ரைட் குடியேற்றத்திற்கும் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ட்ரைட் குடியிருப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் நாகப்பட்டினத்திலிருந்த அரசு முகவர்களின் பண்டகச் சாலைகளில் வைத்துப் பராமரிக்கப்பட்டனர். இதே காலகட்டத்தில் இலங்கை காப்பித் தோட்டங்களில் ஏற்பட்ட வளர்ச்சி, தொழிலாளர்களின் தேவையை வெகுவாக அதிகரித்தது. 1839-இல் சட்டத்திற்குட்பட்ட, முறைப்படுத்தப்பட்ட இந்திய கூலித் தொழிலாளர்களின் புலப்பெயர்வு இலங்கைக்கு ஆரம்பித்தது. இதே வருடம் 2,432 சட்டப்பூர்வ ஒப்பந்த கூலித் தொழிலாளர்கள் மதராஸ் மாகணத்திலிருந்து இலங்கை காப்பித் தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். அதன்பின்னர் இரண்டு ஆண்டுகள் கழித்து இலங்கை அரசு அமல்படுத்திய புதிய தற்காலிக சட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தங்களை மீறும் இந்திய கூலித் தொழிலாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்கும் தண்டனை வழங்குவதற்கும் தோட்ட முதலாளிகளுக்கு அதிகாரம் வழங்கியது. இருப்பினும் தாயகத்தின் அருகாமை தொழிலாளர்களை தோட்டங்களிலிருந்து ஈர்த்தது. ஏராளமான தொழிலாளர்கள் புதிய பணிச்சுமை தாங்காமல் தோட்டங்களை விட்டு வெளியேறி தமது கிராமங்களுக்கு வந்து சேர்ந்தனர்.

தோட்டங்களுக்குத் தேவையான தொழிலாளர்களைப் கவர்வதற்காக வெள்ளை முதலாளிகள் பல்வேறு கபடம் நிறைந்த கவர்ச்சிகரத் திட்டங்களையும், நாடகங்களையும் தங்கள் முகவர்கள் மூலம் நிறைவேற்றினர். குறிப்பாக, காப்பித் தோட்டங்களுக்கு சென்று வேலை செய்தால் கைநிறைய பணம் கிடைக்கும் என்றும், சேமித்த பணத்தின் மூலம் தங்கள் ஊர்களில் சொந்தமாக விளைநிலங்கள் வாங்கி வாழ முடியுமென பொருளாதார வளமை நிறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினர். வருடத்திற்கு 70,000-பேர் தென்-இந்தியவிலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்தாகக் கணக்கிடப்பட்டது. அவர்களில் வருடத்திற்கு 54,000-பேர் இந்தியா திரும்பியதாகவும், பலர் காட்டு வழிகளிலே மடிந்து போனதாகவும் ஏனைய தொழிலாளர்கள் இலங்கை தோட்டங்களிலே நிரந்தரமாக குடியமர்ந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டது.